**செய்தி வெளியீடு எண்:497** **நாள் :09.10.2014**

பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் மற்றும் குருவை 2014 பருவ நெல் கொள்முதல் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில், 09.10.2014 மாலை 04.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்குத் தேவையான புழுங்கல் அரிசி, பச்சரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் முதலான அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் கிடங்குகளிலிருந்து அங்காடிகளுக்கு அக்டோபர் மாதம் 15ம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டுமென்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பொது மக்கள் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் சம்பந்தமான குறைபாடுகள் ஏதேனும் இருந்தால் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் அலுவலக தொலைபேசி எண். 044–2859 2828 என்ற எண்ணிலும், schtamilnadu@gmail.com, consumer@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொண்டு தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். மேலும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக சென்னை தலைமை அலுவலக கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண். 94451–90660, 94451–90661, 94451–90662 ஆகியவற்றில் தொடர்பு கொண்டு நெல் கொள்முதல், கிடங்குகள் மற்றும் அங்காடிகளில் அத்தியாவசியப் பொருள்கள் இருப்பு சம்பந்தமான குறைகளை தெரிவிக்கலாம். இது தவிர பொருள்கள் நகர்வு குறித்த அன்றாட நிலவரத்தை கண்காணிக்க பொது மேலாளர்கள், மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பண்டிகைக் காலங்களில் வெளிச்சந்தையில் அரிசி விலை உயராமல் தடுக்கும் பொருட்டு தொடங்கப்பட்ட 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 311 கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகள் மூலம் 8,400 மெ.டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், வெளிச்சந்தையில் ஒரு கிலோ புளி ரூபாய் 60 என்ற விலையில் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகள் மூலம் நடத்தப்பட்டு வரும் 53 பண்ணைப் பசுமை நுகர்வோர்

கடைகள் தரமான புதிய காய்கறிகளை குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றன.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியிருப்பதால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் காவேரி டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பிற மாவட்டங்கள் அனைத்திலும் போதுமான, தரமான அத்தியாவசியப் பொருள்களை கிடங்குகளில் இருப்பு வைக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

விவசாயிகள் தற்போது அறுவடை செய்து வரும் குறுவை நெல்லை விற்பனை செய்வதற்கு ஏதுவாக டெல்டா மாவட்டங்களில் 01.10.2014 முதல் 189 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இன்று வரை 689 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. **தமிழக அரசு, 2014–15ம் ஆண்டு கொள்முதல் பருவத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் மாநில அரசின் ஊக்கத்தொகையாக சன்னரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.70/–ம் சாதா ரக நெல்லுக்கு ரூ.50/–ம் சேர்த்து சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1470/–ம், சாதா ரக நெல்லுக்கு ரூ.1410/–ம் என உத்தரவிடப்பட்ட கொள்முதல் விலை 01.10.2014 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.** அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகளின் தேவைக்கேற்ப நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இக்கூட்டத்தில் அரசு உணவுத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா,இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத்துறை கூடுதல் இயக்குனர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.பா., தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் திரு.கே.நாகராஜன்,இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**